# கள்ளக்குறிச்சி நகராட்சி

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் தேதி திஙகட்க்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திருமதி து.பாரதி, M.Tech.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## பொருள் எண் – 01

நகராட்சி ஆணையர், வாணியம்பாடி அவர்களின் ந.க.எண்.2339/2019/இ1 நாள்:- 20.07.2020 ஆம் தேதிய கடிதத்தில் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அலுவலகத்தில் 1.காணொலி காட்சி கட்டமைப்பு வசதிகள், 2) கூட்ட அரங்கு வசதிகள், 3) மின்சார கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட ரூ.4650000/-க்கு வேலூர் மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு நகராட்சியின் பகிர்ந்தளிக்கும் பங்குத்தொகையில் இந்நகராட்சிக்கான பங்கு தொகை 5 சதவீதமான ரூ.232500/-ஐ வங்கி வரைவோலையாக வாணியம்பாடி நகராட்சிக்கு அனுப்பி வைக்க தெரிவித்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். இ1/584/2020)**

## பொருள் எண் – 02

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13433/2018/ ஜே1 நாள்:- 17.09.2018 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் நேரடி மற்றும் காணொலி காட்சி வழியே நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்ட அறிவுரைக்களுக்கிணங்க கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் மற்றும் கொரோனா தொற்று வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஒவ்வொரு நகராட்சி பகுதியிலும் மொத்த வீடுகளை கணக்கீடு செய்து 300 வீடுகளுக்கு 1 மஸ்தூர் என்ற அடிப்படையில் (DBC) கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு பணியாளர்கள் பணியமர்த்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டதற்கிணஙக, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மொத்தம் 14285 வீடுகள் உள்ளது. மேற்படி 300 வீடுகளுக்கு 1 மஸ்தூர் என்ற கணக்கில் (14285 / 300 = 47 ) 47 மஸ்தூர் பணியாளர்களை நியமனம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் வேலூர் அவர்களின் அறிவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி பகுதியில் Out Sourcing முறையில் 47 மஸ்தூர் பணியாளர்களை பணியமர்த்தி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.62.00 (ரூபாய் அறுபத்தி இரண்டு லட்சம்) செலவினத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கிட உரிய கருத்துரு அனுப்பவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1700 /2020 /எச்1)**

## பொருள் எண் – 03

மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டம் மற்றும் நேரடி அறிவுரைக்களுக்கிணங்க தற்போது கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பரவிவரும் கொரோனா நோய் தொற்று அதிகளவில் பரவிவருவதால் இந்நோய் குறித்து நன்கு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் தினசரி ஆட்டோ மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகர்மன்ற தீர்மான எண். 291 நாள் :–30.04.2020 ல் அனுமதி பெறப்பட்டு 15.04.2020

முதல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ள அதற்கான செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது 02.08.2020 வரை தொகைரூ.490500.00 செலவிடப்பட்டுள்ளது. தற்போது பொது மக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகஸ்ட் 2020 முதல் செப்டம்பர் 2020 வரை இரண்டு மாதங்களுக்கு ஆட்டோ மூலம் பொதுமக்களுக்கு கொரோனா நோய் தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று ஏற்கனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் திரு.ஆர்.ராஜதுரை என்பவரின் மூலமாகவே பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**3.**பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733/13 / 2020 /எச்1)**

**<u>பொருள் எண் –04</u>**

அரசாணை எண். 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 09.08.2010-ல் இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 21 வார்டுகளை உள்ளடக்கி, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 52507 மக்கள் தொகை கொண்டதாகவும் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 15.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்நகராட்சியில் கீழ்க்காணும் விவரப்படி பொறியியல் பிரிவில் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சி பொறியாளர் (நிலை-3) | -- | 1 |
| 2. | பணி மேற்பார்வையாளர் | -- | 1 |
| 3. | பணி ஆய்வாளர் | -- | 1 |
| 4. | குழாய் ஆய்வாளர் | -- | 1 |
| 5. | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி காவலர் | -- | 1 |

மேற்காணும் 5 பணியிடங்கள் மட்டுமே இந்நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில், இப்பணியிடங்கள் 2004ல் மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட நிலையில் முதல் நகராட்சிக்கான பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாத நிலையில் உள்ளது. இந்நகராட்சியில் கீழ்க்காணும் விவரப்படி தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | -- | 1061 |
| 2. | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | -- | 462 |
| 3. | 36 வாட்ஸ் சி.எப்.எல். விளக்குகள் | -- | 373 |
| 4. | உயர் கோபுர மின் விளக்குகள் | -- | 9 |
| | **மொத்தம்** | **--** | **1905** |

தற்போது கள்ளக்குறிச்சி விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரித்து தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டு 26.11.2019 முதல் மாவட்ட நிர்வாகம் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்நகரில் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும் மாவட்ட தலைநகரத்தில் இந்நகராட்சி செயல்பட்டு வரும் நிலையில் தெருமின் விளக்குகள் பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

தற்போது 2020-2021 ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் (Casual Labour) நபர் ஒருவருக்கு ரூ. 371/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து தெருமின் விளக்குகள் பணியின் அவசர அவசியம்

கருதி தெருமின்விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும் ஆறுமாத காலத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான **உத்தேச செலவீனம் ரூ.9.90.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூராயிரம் மட்டும்)–க்கு** மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1970 / 2020 / இ1)**

## <u>பொருள் எண் – 05</u>

அரசாணை எண். 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 09.08.2010-ல் இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 21 வார்டுகளை உள்ளடக்கி, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 52507 மக்கள் தொகை கொண்டதாகவும் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 15.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்நகராட்சியில் கீழ்க்காணும் விவரப்படி பொறியியல் பிரிவில் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

1. நகராட்சி பொறியாளர் (நிலை-3) -- 1
2. பணி மேற்பார்வையாளர் -- 1
3. பணி ஆய்வாளர் -- 1
4. குழாய் ஆய்வாளர் -- 1
5. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி காவலர் -- 1

மேற்காணும் 5 பணியிடங்கள் மட்டுமே இந்நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில், இப்பணியிடங்கள் 2004ல் மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட நிலையில் முதல் நகராட்சிக்கான பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாத நிலையில் உள்ளது. இந்நகராட்சியில் மொத்தம் 61.083 கி.மீ. நீளம் குடிநீர் பகிர்மான குழாய்கள் உள்ளது. இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி மின் மோட்டார்கள் / மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் இதரவைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Mini Power Pumps (MPP) | -- | 275 |
| 2. | Open Wells | -- | 13 |
| 3. | Power Pumps | -- | 4 |
| 4. | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் | -- | 6 |
| 5. | Gate Valves | -- | 236 |
| 6. | WS Lorry | -- | 1 |
| 7. | JCB | -- | 1 |
| | மொத்தம் | | **536** |

தற்போது கள்ளக்குறிச்சி விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரித்து தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டு 26.11.2019 முதல் மாவட்ட நிர்வாகம் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்நகரில் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும் மாவட்ட தலைநகரத்தில் இந்நகராட்சி செயல்பட்டு வரும் நிலையில், தினசரி தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

தற்போது 2020-2021 ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தில் தினகூலி அடிப்படையில் (Casual Labour) நபர் ஒருவருக்கு ரூ. 371/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து தெருமின் விளக்குகள் பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் விநியோக பணிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும் ஆறுமாத காலத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான **உத்தேச செலவீனம் ரூ.9.90.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணுராயிரம் மட்டும்)– க்கு** மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1971 / 2020 / இ1 )**

## <u>பொருள் எண் – 06</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரிந்துவரும் கீழ்கண்ட பணியாளர்களுக்கு வாகணமுன்பணம் வழங்க கோரியுள்ளனர்

| வ.எண் | பெயர்/பதவி | வழங்ககோரும் தொகை |
|---|---|---|
| 1. | எம்,அப்பாதுரை<br>களப்பணிஉதவியாளர் | 50,000/– |
| 2. | எஸ். வேல்முருகன் ஒட்டுநர் | 50,000/– |
| 3. | சி.முருகன்<br>வருவாய் உதவியாளர் | 50,000/– |
| | மொத்தம் | 1,50,000/– |

மேற்கண்ட பணியாளர்களுக்கு வாகனமுன்பணம் வழங்க கோரியுள்ளதை தொடர்ந்த அரசாணை எண் 467 நிதித்தறை நாள் 22.09.2009 மற்றும் அரசுவிதிகளின்படி இரண்டுசக்கர வாகனம் வழங்க ரூ.50,000/– முன்பணம் வழங்கலாம் ,மேற்படி முன்பண தொகையினை அன்னாரின் மாதந்திர ஊதியத்தினை அஅல் மற்றும் வட்டி கணக்கீடு செய்து மாதமாதம் பிடித்தம் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/– க்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்காலம்

**(ந.க.எண். 971/ 2020 / சி1 )**

## <u>பொருள் எண் – 07</u>

இந்நகர்மன்ற தீர்மான எண்.303 நாள்:- 29.05.2020ல் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளுக்கு, 47 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு ராசி மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் தேர்ந்தெடுத்து ஆகஸ்ட் 2020 வரை அனுமதி பெறப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், தற்போது இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் வெகுவாக பரவி வருவதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் அறிவுரையில் டெங்கு நோய் தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கொசுப்புழு பணியாளர்களை பணி நீட்டிப்பு செய்து கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடம் ஏற்படுத்தவும், டெங்கு மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே பணிபுரியும் ராசி மகளிர் சுயஉதவி குழு மூலமாகவே தொடர்ந்து 47 பணியாளர்களை செப்டம்பர் 2020 மாதத்திற்கு பணியில் அமர்த்திகொள்ளவும்,

இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகை நாளொன்றுக்கு ரூ.289/- வீதம் ஊதியம் வழங்கிடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணிபுரியும் ராசி மகளிர் சுயஉதவிகுழு மூலமாகவே செப்டம்பர் 2020 மாதத்திற்கு பணிபுரியவும் மன்றம் அனுமதிக்கலாம்

3.மாவட்ட ஆட்சி தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.289/- ஊதியமாக வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4.பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1490 /2019/எச்1)**

## <u>பொருள் எண் – 08</u>

இந்நகர்மன்ற தீர்மான எண். 277 நாள் :–31.03.2020 ல் தற்போது கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பரவிவரும் கொரோனா நோய் தொற்று அதிகளவில் பரவிவருவதால் இந்நோய் குறித்து நன்கு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் டிஜிட்டல் பேனர்கள் மற்றும் தடுப்பு கட்டைகள் மீது தடைசெய்யப்பட்ட பகுதி என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்ட வருகிறது. மேலும் தற்போது இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் அதிதீவிரமாக பரவிவருவதாலும், பாதிக்கப்பட்ட வீட்டினை எவரும் வெளியில் வராத வண்ணம் தடுப்புகட்டைகள் அமைக்கப்பட்டு சுவற்றின் மீது தனிமைபடுத்தப்பட்ட வீடு என்ற வாசகம் பொருந்திய டிஜிட்டல் பேனர்கள் ஒட்டப்பட வேண்டும் எனவும், மேலும், அவ்வப்போது பொதுமக்களுக்கு கொரோனா நோய் தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 734/ 2020 /எச்1)**

## <u>பொருள் எண் – 09</u>

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வீடு வீடாக சென்று முதல் நிலை சேகரமாகும் குப்பைகளை சேகரிக்க தூய்மை இந்தியா திட்டத்தின் SHPC ன் கீழ் வழங்கப்பட்ட Battery of Vehicle 12 எண்ணிக்கை BoV வாகனங்களுக்கு பழுது ஏற்பட்டுள்ளதால் முதல் நிலை சேகரம் செய்யும் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இதனால் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள சிரமமாக உள்ளது. எனவே, பொது சுகாதார் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்கண்ட மின்கல ஊர்திகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1020 /2020/எச்1)**

## பொருள் எண் – 10

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பிரதிவாரம் வெள்ளிக்கிழமைகளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களால் திட்டப்பணிகள், கொரேனா சம்பந்தப்பட்ட பணிகள் மற்றும் UTIS பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் காணொலி காட்சி மூலம் நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி காணொலி காட்சி மூலம் நடத்தப்படும் ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள நகராட்சி வசம் மடிக்கணினி (LapTop-All in One System) இல்லை என்பதால் மடிக்கணினி கொள்முதல் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/– வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/ )

**தனி அலுவலர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**

senthil council sub 2020 augest2020